# Spirituality as Revealed by Ethical Texts

**M. Umadevi**
*Assistant Professor, Department of Tamil*
*Kongu Arts and Science College (Autonomous), Erode*

**Abstract**
*Nature and spirituality are intertwined. The Siddhars sought spirituality through nature. Spirituality is related to the inner self. It rejects impurity. Those with inner purity were considered to possess divine grace. Ethical texts emerged to refine the inner self. Righteousness functioned based on justice. Justice texts also revered the divine. Figures like Avvai, Athiveerarama Pandiyan, and Ulaganathar revered the divine through ethics. On the other hand, individuals like Vivekananda, Bharathi, Vallalar, and Adi Shankarar did not emphasize idol worship. They perceived the divine through inner purity, compassion for living beings, and equality.*
***Keywords:*** *Spirituality, Inner Puritiy, Equality*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255950

**References**

1. Vijayavarman, April 2008, Shri Ramakrishna Paramahamsar Ponmozhigal, Aruna Publications, Chennai &600 049.(Page No:53)
2. Aabashthamban, 2009 , Vadaloor Adigalaarin Vazhkkai Varalaaru0, Rajakumari Publication, Chennai & 600037. (Page No:39)
3. Thiru. S. Vaiththiuanatha Krishnan, 2006, Aathi Shankarar, Vijaya publications, Covai.(Page.No:85)
4. Jeyasharma, September 2021,Aanmeegaththai agam niraiththar bharathi, Vallamai, First Peer Reviewed Journal.

# நீதி நூல்கள் உணர்த்தும் ஆன்மீகம்

*ம. உமாதேவி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு

## முன்னுரை

ஆன்மீகம் அக ஒழுக்கம் சார்ந்தது. அகத்தைத் தூய்மைப்படுத்துவது ஆன்மீகத்தின் முக்கிய நிலையாகும். சித்தர்களும் யோகிகளும் அகத்தூய்மையே முதன்மையாகக் கருதினர். இயற்கையின்வழியே ஆன்மீகத்தைஅடைந்தனர். புறத்தூய்மை என்பது அதற்கு அப்பாற்பட்டது என்று கருதினர். விவேகானந்தர், வள்ளலார் போன்று வரும் ஏழைகளுக்கு உதவுவதையும் பசிப்பிணி போக்குதலையும் ஆன்மீகமாக கருதினர். இப்படி பல்வேறு நிலைகளில் ஆன்மீகம் வளர்ந்துள்ளது அவ்வகையில் நீதி கருத்துக்களை வலியுறுத்தும் நீதி நூல்களிலும் ஆன்மீகம் எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்பதை அறிவது இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

## நீதி நூல்கள்

ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நான்கு நூல்கள் அவ்வையாருடையன. வெற்றி வேட்கையின் ஆசிரியர் அதிவீரராமபாண்டியர். உலகநாதரால் இயற்றப்பட்ட உலகநீதி ஆகிய நூல்களும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

## இயற்கையும் இறைமையும்

இயற்கையின் வழியே இறைமை உணரப்படுகிறது. பஞ்ச பூதங்களின்சேர்க்கை பிரபஞ்சம். பிரபஞ்சத்தின் ஒரு துளி மனித இனம். மனித சக்திக்கு அப்பாற்பட்டதை இறை சக்தி என்கின்றோம். இறை சக்திக்கு உருவம் கொடுத்து கடவுள் என்கின்றோம். தண்ணீர் உறையும் போது பனிக்கட்டியாக ஆவது போல் சர்வேஸ்வரனின் உண்மை உருவமானது உருவமற்று எங்கும் நிறைந்துள்ள பிரம்மத்தின் கட்டியாகிய உருவமாகும்[1] என்று கூறுகிறார் ராமகிருஷ்ண பரமஹம்சர். ஆகவே இயற்கையும் இறைமையும் வேறு வேறு அல்ல.

## ஆத்திச்சூடி

ஆத்திச்சூடியில் அவ்வை மனிதனை வழிப்படுத்த பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்திருந்தாலும் இறைவனை பற்றியும் பேசுகிறார்.

**அறனை மறவேல் (பா.எண்:30)**

எக்காரணத்திற்காகவும் எக்காலத்திலும் தர்மத்தை மறந்து விடாதே என்பது இதன் பொருள். அதேபோல,

**காப்பது விரதம்; (பா.எண்:33)**

**கீழ்மை அகற்று (பா.எண்:35)**

என்றும் குறிப்பிடுகின்றார். இதில் காப்பது விரதம் என்றால் வாழ்க்கைக்குத் தேவையான நல்லபழக்கங்களைக் கடைபிடித்து வாழ வேண்டும் என்கின்றார். அதற்கு அடுத்த பாடலிலேயே கீழ்மை அகற்று என்று கூறுகின்றார். இதன் பொருள் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றிலும் இழிவானவற்றை நீக்கிவிடு என்று சுயஒழுக்கம் பற்றி பேசுகின்றார். விரதம் என்ற சொல் உண்ணா நோன்பை குறிப்பது அல்ல; கீழான சிந்தனைகளை அகற்றி மனதை தூய்மைப்படுத்து தலைக் குறிக்கின்றது.

**திருமாலுக்கு அடிமை செய்; (பா.எண்:57)**

**தெய்வம் இகழேல் (பா.எண்:61)**

மனிதன் இன்னொரு மனிதனுக்கு அடிமையாக இருத்தல்கூடாது என்பதையும் கடவுளுக்கு பணி செய், ஆனால் வேறு யாருக்கும் அடிமையாகாதே என்றும் கூறுகிறார். இதில்

மனிதனின் ஆதிக்க சிந்தனை அவ்வையால் மறுக்கப்படுகிறது.

**கொன்றை வேந்தன்**

***அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்***
***(பா.எண்:1)***

என்று பெற்றோர்களை முதன்மைப்படுத்து கிறார் அவ்வை.

***ஆலயம் தொழுவது சாலவம் நன்று***
***(பா.எண்:2)***

என்று இறைவழிபாட்டினையும் முன்னிலைப்படுத்துகின்றார். ஆலயம் சென்று இறைவனை வணங்கும் பொழுது மனம் ஒன்றுபட வேண்டும். மனம் ஒன்றுபடும்போது அது ஆன்மசக்தியாக உருவெடுக்கிறது. ஆன்மசக்தி மனிதனை இயக்குகிறது.

***செய்தவம் முதிர்ந்தால் கைதவம் மாளும்;***
***(பா.எண்:32)***

***தெய்வம் சீறின் கைதவம் மாளும்***
***(பா.எண்:43)***

தவம் அதிகரித்தால் மாய வாழ்க்கை மேல் உள்ள பற்று குறைந்து ஆன்ம நெறியோடு மனம் ஒன்றி போகும் என்கின்றார். அதே வஞ்சக செயல் புரிந்து வாழ்க்கை வாழ்ந்தால் தெய்வத்தால் தண்டிக்கப்படுவோம் என்றும் கூறுகின்றார் சுய ஒழுக்கத்தின் குறியீடாக தெய்வத்தை கருதுகின்றார் அவ்வை என்பது இதில் புலனாகிறது.

**மூதுரை**

***மறுவினிய சுற்றமும் வான் பொருளும் நல்ல***
***உருவும் உயர் குலமும் எல்லாம் - திருமடந்தை***
***ஆகும்போது அவளோடும் ஆகும் அவள் பிரிந்து***
***போகும்போது அவளோடும் போகும்***
***(பா.எண்:29)***

இப்பாடலில் அவ்வை வாழ்க்கைக்கு செல்வம் எவ்வளவு நிலையில்லாதது என்பதைப் பற்றி எடுத்துரைக்கின்றார். திருமகளைக் குறியீடாக பயன்படுத்தியுள்ளார். இதன் வழியே செல்வத்தை விட ஒழுக்கமே நிலையானது என்று புலப்படுத்துகின்றார்.

***சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை***
***ஆந்தனையும் காப்பார் அறிவுடையோர் - மாந்தர்***
***குறைக்குந் தனையும் குளிர் நிழலைத் தந்து***
***மறைக்குமாம் கண்டீர் மரம்***
***(பா.எண்:30)***

மரம் தன்னை வெட்டுபவர்களுக்கும் நிழல் தருவது போல தூய மனமுடைய சான்றோர் ஒருவர் தமக்கு தீங்குகளையே செய்தாலும் சாகும் வரையில் தன்னை முடிந்த வரை அவரை பாதுகாப்பார் என்று ஆன்ம ஒழுக்கத்தின்உன்னத நிலையினை இப்பாடல் வழி எடுத்துரைக்கின்றார். இதனையே வள்ளலார்,

***வாடிய பயிரை கண்டபோ தெல்லாம்***
***வாடினேன் பசியினால் இளைத்தே***
***வீடுதோறு இரந்தும் பசியறாது அயர்ந்த***
***வெற்றாரைக் கண்டு உளம் பதைத்தேன்[2]***

என்று உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலைப் பதிவு செய்துள்ளார். பிற உயிர்களுக்கு உதவி செய்வதில் இறைவனை காணலாம் என்பது இதன் வழி புலனாகிறது.

**நல்வழி**

***புண்ணியம்ஆம் பாவம்போம் போனநாள் செய்தஅவை***
***மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் - எண்ணுங்கால்***
***ஈதொழிய வெறில்லை எச்சமயத்தார் சொல்லும்***
***தீதொழிய நன்மை செயல் (பா.எண்:1)***

என்ற இப்பாடலில் நல்வினைக்கும் தீவினைக்குமான வேறுபாட்டினை எடுத்துரைக்கின்றார். நல்வினையானது நல்ல ஆக்கத்தை கொடுக்கும், தீவினையானது அழிவினை நோக்கி இட்டுச் செல்லும். எனவே நல்லகாரியங்களை செய்தல் வேண்டும் அதன் மூலமே இறைவனை அடையமுடியும்.

**செய்தீ வினையிருக்க தெய்வத்தை நொந்தக்கால்**
**எய்த வருமோ இருநிதியம் - வையத்து**
**அறும்பாவம் என அறிந்து அன்று இடர்க்கின்று**
**வெறும்பானை பொங்குமோ மேல்**

***(பா.எண்:17)***

இப்பாடல் முற்பிறப்பில் செய்த தீவினையின் பாவமானது அடுத்தபிறவியிலும் தொடரும் என்கின்றார். தெய்வத்தால் கூட அதனை தடுக்கமுடியாது. எனவே மனமானது தூய்மையான எண்ணத்துடன் இருக்க வேண்டும் தீயே எண்ணங்கள் மனதில் தோன்றினாலும் அதனை தவிர்த்து நல்ல எண்ணங்கள் மேலோகினால் மட்டுமே வாழ்க்கை சிறக்கும். நல்வினை தீவினை குறித்து ஆதிசங்கரரும்,

**யல்லபஸே நிஜகர்மோ பந்தம்**
**வித்தம் தேன வினோதய சித்தம்**[3]

என்ற வரிகளில் நல்ல உழைப்பே நன்மையை தரும் தீயவினையில் சேர்த்த பொருள் சமுதாயத்தையே சீர்குலைத்து விடும் என்கின்றார். மனித மனமானது நல்வழியிலேயே சிந்தித்து செயலாற்ற வேண்டும். தலையை மொட்டை அடித்துக் கொண்டு அல்லது சடை தரித்துக்கொண்டு காவித்துணி அணிந்து கொண்டிருப்பவர்கள் கண்கள் இருந்தும் பார்க்க தவறிவிட்டவர்கள். ஏனெனில் அவர்கள் வயிற்றை வளர்ப்பதற்காக இவ்வேடங்களைத் தரித்தவர்கள் என்று போலி ஆன்மீகவாதிகளை பற்றி ஆதிசங்கரர் எடுத்துரைக்கின்றார். மனத்தூய்மையோடு இறைவனை அணுக வேண்டும் அதுவே பேரானந்தம் என்றும் குறிப்பிடுகின்றார்.

**வெற்றிவேற்கை**

**இருவர்தம் சொல்லையும் எழுதரம் கேட்டே**
**இருவரும் பொருந்த உரையார் ஆயின்**
**மறுமுறை நிறையின் வழக்கிழந்தவர்தாம்**
**மனம்முற மறுகி நின்று அழுத கண்ணீர்**
**முறையுறத் தேவர் மூவர் காக்கினும்**
**வழிவழி ஈர்வதோர் வாளா கும்மே**

***(பா.எண்:75)***

நீதி விசாரணையின் போது இரு தரப்பினரிடமும் ஏழு முறை குறுக்கு விசாரணை செய்து தீர விசாரித்த பின்னர் தங்களின் மனசாட்சி படி தீர்ப்புவழங்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் ஒரு தலைப்பட்சமாக தீர்ப்புவழங்கினால் அதனால் பாதிக்கப்பட்டவர் அழுத கண்ணீர் அவரை மட்டும்அல்லாமல் அவரது தலைமுறையை பாதிக்கும் என்கின்றார் எனவே இப்பாடலில் இவர் நீதியின் வழி இறைமையை நாடுகின்றார்.

**உலகநீதி**

**கூறாக்கி ஒருகுடியைக் கெடுக்க வேண்டா**
**கொண்டைமேல் பூத்தேடி முடிக்க வேண்டா**
**தூறாக்கித் தலையிட்டுத் திரிய வேண்டா**
**துச்சனராய் திரிவாரோடு இணங்க வேண்டா**
**வீறான தெய்வத்தை இகழ வேண்டா**
**வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டா**

***(பா.எண்:107)***

இன்னும் நீ பாடலில் புற அழகிற்கு முக்கியத்துவம் தருதலை விட அக அழகே முக்கியமானது என்றும் எண்ணம் தூய்மையாக இருக்க வேண்டும் என்றும் இழிவான காரியங்கள் செய்பவரோடு இணங்க வேண்டாம் என்றும் கடவுளை பழித்துரைக்க கூடாது என்றும் வலியுறுத்துகின்றார். உலகநாதர் தன் செயல்கள் மூலமே இறைவனை அணுகுகின்றார்.

“தெய்வம் நீ என்றுணர்” என்று ஆத்தி சூடியில் பாரதி கடவுள் கொள்கையினைக் காட்டும் பாங்கும் அவனின் தெளிந்த ஆன்மீகத்தை வெளிப்படுத்தி நிற்கிறதல்லவா! பாரதி கடவுள் நம்பிக்கை மிக்கவனாகவே இருந்தான். அவனின் எந்தச் செயலிலும் எப்படியோ தெய்வம் பற்றிய சிந்தனை வந்தே நிற்கும். இதற்கு அடிப்படையே அவனின் அகத்திருந்த ஆன்மீகமே எனலாம்.[4] இறைமை என்பது உனக்குள்ளே தான்

உண்டு என்று ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் ஆன்மா ஒளியினை முன்னிலைப் படுத்தியவர் பாரதி. எனவே ஆன்மீகத்தினை வெளியில் தேடாமல் சுய ஒழுக்கத்தை முதன்மை படுத்தியே பாரதியும் கூறுகின்றார்.

**முடிவுரை**

இயற்கையும் ஆன்மீகமும் இரண்டறக் கலந்த ஒன்று. சித்தர்கள் இயற்கையின் வழியே ஆன்மீகத்தைத் தேடினர். ஆன்மிகம் அகம் சார்ந்தது. புறத்தூய்மையை அது நிராகரிக்கின்றது. அகத்தூய்மை உடையவர்களே அருள் உடையவர்களாக் கருதப்பட்டனர். அகத்தைச் சீர்படுத்தவே அறநூல்கள் தோற்றம் பெற்றன. அறமானது நீதி சார்ந்து இயங்கியது. நீதி நூல்களும் இறைமையை போற்றின. அவ்வை, அதிவீரராம பாண்டியர், உலகநாதர் போன்றோர் ஒழுக்கம் சார்ந்து இறைமையை போற்றினர். விவேகானந்தர், பாரதி, வள்ளலார், ஆதிசங்கரர் போன்றோர் உருவ வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மனத்தூய்மை, உயிர் இரக்கம், சமநீதி இவற்றின் வழியே இறைமையைக் கண்டனர். எனவே ஆன்மீகம் என்பது புறத்தோற்றம் சார்ந்ததல்ல. அகத்தே இருந்து வெளிப்படுவது.